சாட்சிகளின் வாக்குமூலம்
பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.
பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.
**அ.வ.எண். 448/2014**
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
வாக்குமூலம் – பி.வா.சா. 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாச்சிமுத்து | மதம் | : | |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | | நாள் | : | 19.06.2026 |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2026 ஆண்டு ஜுன் 19ம் நாள் சாட்சியம்.

---

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பூமிக்கும், வாதியின் பூமிக்கும் பழைய க.ச.எண்.336 ஆகும். அந்த பழைய க.ச.எண்.336–ன் மொத்த விஸ்தீரணம் 12 ஏக்கர் 95 செண்ட் ஆகும். அந்த பழைய க.ச.எண். க.ச.எண்.336ன் ரீ.சர்வேயின் போது ரீ.ச.எண்.299/1,2,3 என மூன்றாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. ரீ.சர்வேயில் எனக்குப் பாத்தியப்பட்ட ரீ.ச.எண்.299/3ன் விஸ்தீரணம் 4 ஏக்கர் 22 செண்ட் ஆக பிரிந்தது. வாதியின் பூமியானது ரீ.ச.எண்.299/2ல் விஸ்தீரணம் 4 ஏக்கர் 47 செண்ட் ஆக பிரிந்தது. அந்த 4 ஏக்கர் 47 செண்ட்டில் 2 ஏக்கர் 10 செண்ட் விஸ்தீரணத்தை வா.சா.ஆ.7–ஆன கிரையப் பத்திரத்தின் மூலம் வாதி விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். அதன் பிறகு வாதிக்கு 2 ஏக்கர் 37 செண்ட் விஸ்தீரணம் பாத்தியப்பட்ட நிலையில் உள்ளது என்றால் சரிதான்.

2. ரீ.சர்வே தொடர்பாக நான் ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை. எனக்கு பாத்தியப்பட்ட 4 ஏக்கர் 25 செண்ட் பூமியில் 1 ஏக்கர் 96 செண்ட் பூமியை 2007–ம் ஆண்டில் நான் விற்பனை செய்து விட்டேன். அதன் பிறகு 24.01.2023–ம் தேதியன்று இந்த வழக்கின் 3 ம் பிரதிவாதிக்கு எனக்கு பாத்தியப்பட்ட மீதம் இருந்த சொத்தில் 25 செண்டினை விற்பனை செய்து விட்டேன். 24.01.2023–ம் தேதியன்று இந்த வழக்கின் 4 ம் பிரதிவாதிக்கு எனக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 20 செண்டினை விற்பனை செய்து விட்டேன். நான் மேற்படி 3,4 ம் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்த ஆவணங்களான கிரையப் பத்திரங்கள் **வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. வாதிக்கு தற்போது ரீ.ச.எண்.299/2–ல் 2 ஏக்கர் 37 செண்ட் பாத்தியப்பட்டது என்பதில் எனக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை. வாதியின் பூமியில் நான் சில காலம் விவசாயம் செய்தேன் என்றால் சரியல்ல.

3. எனது பூமிக்கும் வாதி பூமிக்கும் இடையில் இருந்த அத்துக்கல் தற்போது கிடையாது. எனது பூமிக்கும், வாதி பூமிக்கும் இடையில் இருந்த முள்வேலியை வாதி அகற்றி விட்டார். முள் வேலி இருந்த இடத்தில் கம்பி வேலி அமைக்காமல் வாதியின் பூமியை நான் ஆக்கிரமிப்பு செய்து கம்பி வேலி அமைக்க முயற்சித்தால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது எனது பூமிக்கும், வாதி பூமிக்கும் இடையில் கம்பி வேலி உள்ளது என்றால் சரிதான். அந்த கம்பி வேலி 3,4 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற பிறகு போடப்பட்டது. கம்பி வேலி அமைக்கப்பட்ட போது நான் வழக்குச்

சொத்தில் இல்லை. கம்பி வேலி 3,4 பிரதிவாதிகள் அளவீடு செய்து அமைத்தார்களா என்று எனக்குத் தெரியாது.

4. ரீ.ச.எண்.299/3 ல் நான் விற்பனை செய்தது போக தற்போது எனக்கு எவ்வளவு பாத்தியம் என்று எனக்குத் தெரியாது. எனக்கு எவ்வளவு பூமி தற்போது பாத்தியம் என்று தெரியாமல் வாதிகளிடம் அதிகமாக பூமி கேட்டு பிரச்சனை செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. 3,4 பிரதிவாதிகள் அமைத்துள்ள கம்பி வேலி வாதியின் பூமியை ஆக்கிரமிப்பு செய்து அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த வழக்கு வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிவடைந்தது</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

/ஒம் /**R**.பாண்டி மகாராஜா,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

தாராபுரம்.